**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.782/2024 நாள்-22.09.2025

**வா.சா.1-சிவசக்தி**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

நான் 10-ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் நிலபுரோக்கராக இருந்து வருகிறேன். நான் டிராக்டர் வைத்துள்ளேன். பிரதிவாதிகளை எனக்கு சுமார் 6 வருடங்களாக பழக்கம். பிரதிவாதிகள் இரயில்வே ஸ்டேசன் அருகில்உள்ள அலுவலகத்திற்கு வந்ததின் மூலம் எனக்கு பழக்கம். நேரடியாக எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பழக்கம் இல்லை. பிரதிவாதிகளின் வீட்டிற்கு நான் சென்றதில்லை. பிரதிவாதிகளின் வயது வீட்டின் முகவரி பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் தனிப்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் டீக்கடையும் என்னை போன்று டிராக்டர் வைத்திருப்பதாக கூறினார்கள். என்னுடைய வழக்குரையில் பிரதிவாதிகள் டிராக்டர் வைத்திருப்பதாக கூறவில்லை என்றால் வாகனம் வைத்திருப்பதாக கூறினார்கள். நான் நிலபுரோக்கராக வருமானம்ஈட்டி வருவதற்கு வருமான வரி செலுத்தவில்லை. எனக்கு நிரந்தர வருமானம் கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் சில்லரை கடனுக்காவும், வியாபார கடனை தீர்பபதற்காகவும் கூறியுள்ள நிலையில் என்ன வியாபார கடன் என்று நான்விசாரிக்கவில்லை. என்னுடைய ஊர் இராஜபாளையம் சம்மந்தபுரம் கிராமம் அம்பேத்கார்நகர் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொந்த ஊர்கரிவலம் வந்தநல்லூர். கரிவலம் வந்தநல்லூரில் இருந்து தான் பிரதிவாதிகள் என்னை என்வீட்டிற்கு வந்தார்களா என்றால் நான் முன்பு சொன்ன குமார் என்பவரின் அலுவலகத்தில் வைத்து பேசிய பின்பு என்வீட்டிற்கு வந்தார்கள். டிஜிட்டல் குமார் அறிமுகப்படுத்தியதின் பெயரில் தான்

பிரதிவாதிகள் எனக்கு பழக்கம் என்றும் , டிஜிட்டடல் குமார் அலுவலகத்தில் வைத்து தான் பேச்சுவார்த்தை நடந்தது என்றும், டிஜிட்டடல் குமார் சொன்னதின் அடிப்படையில் தான் பிரதிவாதிகளுக் க டன் கொடுத்தாக என்னுடைய வழக்குரை மற்றும் நிருபணவாக்குமூலத்தில் கூறவில்லைல எ ன்றால் சரிதான். வாசாஆ.1 கடன் உறுதிசீட்டை பூர்த்தி செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுடன் வந்த நபர் தான் எழுதினார் அவர் பெயர் முகவரிஎனக்கு தெரியாது. வாசாஆ.1 கடன் உறுதிசீட்டில் சாட்சிகையொப்பம் செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ.1 கடன் உறுதிசீட்டில் சாட்சி கையொப்பம் செய்த முனீஸ்வரன் என்பவர் தான் கடன்உறுதிசீட்டை எழுதியதாக நான்கூறுகிறேன் . பிரதிவாதிகளுடன் முனீஸ்வரன் என்பவர் மட்டும் தான் வந்தார் வேறுயாரும்வரவில்லை. சாட்சியின் முகவரியை வைத்து வாசாஆ.1 கடன் உறுதிசீட்டில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களை நான் தேடிப்பார்த்து நான் சாட்சியை பற்றி தெரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ.1 கடன் உறுதிசீட்டில் பூர்த்தி செய்த எழுத்துக்களும் சாட்சியின் எழுத்துக்களும் வேறுவேறாக உள்ளது என்றால் சரிதான். வாசாஆ.1 கடன் உறுதிசீட்டில் சாட்சியின் எழுத்துக்களும் ஸ்டாம்ப் மீது போடப்பட்டுள்ள கையொப்பமும் ஒன்று போல் உள்ளதா என்றால் இல்லை ஆனால் ஸ்டாம் மீது போடடப்பட்டுள்ள எழுத்துக்களும் பூர்த்தி செய்த எழுத்துக்களும் ஒன்று போல் உள்ளது. வாசாஆ.1 கடன் உறுதிசீட்டை பூர்த்தி செய்யும் போதோ பிரதிவாதிகள் கையொப்பம் செய்யும் போதோ நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அப்போது நான் வங்கிக்கு சென்றுவிட்டேன். எ ன்னுடைய வழக்குரையில் பிரதிவாதிகள் வாசாஆ.1 கடன் உறுதிசீட்டை பூர்த்தி செய்து கொடுதது கடன்வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எப்போது என்னிடம் கடன் கேட்டார்கள் என்றால் 1மாதத்திற்கு முன்பாக கடன் கேட்டார்கள் . அதை 1மாதமாக நான் விசாரித்த பின்பு

தான் கடன் கொடுத்தேன். கரிவலம் வந்த நல்லூர் சென்று பிரதிவாதிகளை விசாரித்தேனா என்றால் இல்லை குமாரிடம் தான் விசாரித்தேன். டிஜிட்டல் குமாருக்கும், பிரதிவாதிக்கும் நல்ல பழக்கம் உண்டு ஆனால் டிஜிட்டல் குமாருக்கும், பிரதிவாதிக்கும் இடையே வரவு செலவு உண்டா எ ன்று நான் கேட்கவும் இல்லை எனக்கு தெரியவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 2 புகைப்படத்தில் உள்ள நபர்களில் யார் பிரதிவாதிகள் என்று கேட்டால் மேற்படி புகைப்படங்களில் பிரதிவாதிகள் இல்லை. மேற்படி புகைப்படம் பிவாசாஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. நான் பிரதிவாதிகளை எத்தனை தடவை பார்த்துளேன் என்றால் இரண்டு தடவை மட்டுமே பார்த்துள்ளேன். பிரதிவாதிகளின் அலைபேசி எண் எனக்கு தெரியாது. இராஜபாளையம் அம்பேத்கார் நகரில் குடியிருந்து வரும் கௌதம் என்பவரை எனக்கு தெரியாது. இந்நீதிமன்றத்தில் கௌதம் என்பவர் பிரதிவாதிகளுக்கு எ திராக கடன்உறுதிசீட்டில் அடிப்படையில் கடன் கொடுத்தற்காக வழக்கு நிலுவையில் இருநது வருகிறது என்றால் எ னக்கு தெரியாது. நான் பிரதிவாதிகளுக்கு தொகையை கேட்டு வழக்கறிஞர்அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். இராஜபாளையம் இரயில்வே பீட்டர் ரோட்டில் இருக்கும் வெங்கடசாமியின் மகன் குமரேசனை எனக்கு தெரியுமா என்றால் குமரேசன் என்று பெயர் உள்ள நபரை எனக்கு தெரியாது. டிஜிட்டல் குமாரை மட்டும் தான் தெரியும். டிஜிட்டல் குமார் என்பவர் வாகனத்திற்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வரவில்லை. நான் பிரதிவாதிகள் யார் என்று தெரியாது என்றும் பிரதிவாதிகள் என்னிடம் கடன் வாங்கியதாக கூறுவது பொய் என்றும், பிவாசாஆ.1 புகைப்படங்களில் பிரதிவாதிகள் இருக்கிறார்கள் என்றும், பிரதிவாதிகள் யார் என்று தெரியாததால் தான் பிவாசா.ஆ.1 புகைப்படங்களை காண்பித்தும் பி.வா.சா.ஆ 1 ல் உள் ள நபர்களில் பிரதிவாதிகளை என்னால் அடையாளம் காட்டமுடியவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் எந்த தேதியிலும் ஒருபோதும் கடன் வாங்கியதில்லை

என்றும், அதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் எழுதிக் கொடுத்ததில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மீது இராஜபாளையம் இரயில்வே பீட்டர் ரோட்டில் இருக்கும் வெங்கடசாமியின் மகன் குமரேசன் என்பவரின் பெயர் இரவளராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு டிஜிட்டல் குமார் என்பவரை தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு மோசடியானது என்றும் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.